**12.10.2022ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கையின் நகல்**

**தேவகோட்டை நகராட்சி.**
**சாதாரணக்கூட்டம்.**

தேவகோட்டை நகராட்சி நகர்மன்ற 12.10.2022ம், தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகர்மன்றம்.**

**பொருள் – 84**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு தேவகோட்டை ரஸ்தா பகுதியில் அமைந்துள்ளது. அக்குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை அளவீடு செய்திட அண்ணா பல்கலைகழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 15.07.2022–ந் தேதி விலைபுள்ளி அறிவிப்பு செய்ததில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் பின் வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | Gridline Surveys and Geospatial Pvt Ltd,Chennai | 59,000/– |
| 2. | M/s. JP Surveys & Consultans | 70,800/– |
| 3. | Orient Surveys | 76,700/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் Gridline Surveys and Geospatial Pvt Ltd., என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை ஏற்க மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 18.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 84 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் – 85**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் டிப்பர் லாரி TN63 AQ1534 வாகனத்தின் தகுதிச்சான்று பெறும் பொருட்டு, வாகன பழுதுகளை நீக்க

வேண்டி 11.07.2022ம், தேதியன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் வரப்பெற்ற 3 விலைப்புள்ளி விகிதங்களின் விபரம்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | FC வேலைக்களுக்காகும் மொத்த செலவு |
|---|---|---|
| 1. | பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி | ரூ. 1,89,550 /– |
| 2. | எஸ்.ரவி, ஆட்டோ கேரேஸ், காரைக்குடி | ரூ.2,06,300 /– |
| 3. | பிரபு குமார் ஆட்டோ மொபைல்ஸ், காரைக்குடி | ரூ.1,99,500 /– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளி விகிதங்களில் குறைவான விலைப்புள்ளி விகிதம் வழங்கிய பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ் நிறுவனத்தின் மூலம் டிப்பர் லாரி TN63 AQ1534 வாகனத்தின் பழுதுகளை நீக்கி தகுதிச்சான்று பெற வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ) குறைந்த விலைப்புள்ளி விகிதம் வழங்கிய பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 26.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 85 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 86

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கு தேவகோட்டை ரஸ்தா பகுதியில் அமைந்துள்ளது. அக்குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்திட குப்பைகளை அளவீடு செய்து தருவதற்கு இயக்குநர் சுற்றுச்சூழல் ஆய்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களுக்கு 07.06.2022–ந் தேதிய கடிதம்அனுப்பப்பட்டதை தொடர்ந்து குப்பைகளை அளவீடு செய்திட கட்டணமாக ரூ.177000/–ம் செலுத்திட 21.06.2022ந் தேதிய கட்டண கேட்பு அண்ணா பல்கலைகழகத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி அத்தொகையினை செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 27.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 86 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 87

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 27 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி நிறுவனத்தின் மூலம் 115 துாய்மை பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேற்படி பணியானது பொது சுகாதார அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று பணி நீடிப்பு செய்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை –காரைக்குடி நிறுவனத்திற்கு வழங்க பெற்ற பணி நீட்டிப்பு காலம் வருகின்ற 31.07.2022 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

அதன்பேரில் இந்நகர் பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகள் புதிய ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுரையின்படி, நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு புதிய பிரேரணை தயார் செய்து, 25.07.2022ந், தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர்–சென்னை அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளது. துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி, நிர்வாக அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்பணிகள் தொடங்கும் வரையில் பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும், மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி நிறுவனத்திற்கு தற்போது உள்ள ஒப்பந்த விதிமுறைகளின் படியும் 01.08.2022 முதல் 31.10.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்தும், பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு இந்நகர்மன்ற தீர்மான அனுமதி எண்.61ன்படியும், 15 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கி பணிமேற்கொள்ள அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.52,00,000/– (ஐம்பத்தி இரண்டு இலட்சம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 87 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 88

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் 30 துாய்மை பணியாளர்களைக் கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 31.07.2022–ந் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுரையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி புதிய பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அதன்பேரில் நிர்வாக அனுமதி பெறும் வரையில் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்தின் மூலம் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் செயல்படவும் மேற்படி நிறுவனத்திற்கு துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படியும் மேலும் மூன்று மாத காலத்திற்கு **01.08.2022** முதல் **31.10.2022** வரை பணி நீடிப்பு செய்யவும், இந்நகர்மன்ற தீர்மான எண்.**61,** நாள் **08.06.2022**ன்படி, **15** சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.12,00,000/– (பனிரெண்டு இலட்சம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **29.07.2022**–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 88 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 89</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள தெரு விளக்குகளை தனியார் நிறுவனமான தரணி அயோஸியேட்ஸ் நிறுவனத்தார் அவர்களால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களின் பராமரிப்பு பணி காலம் **31.03.2022** அன்று முடிவடைந்ததை அடுத்து பணி நீட்டிப்பு செய்து **31.07.2022** முடிய பணி நீட்டிப்பு செய்த காலம் முடிவடைகிறது. மேலும்LED விளக்குகளாக மாற்றம் செய்திட வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னையில் பிரேரனை நிலுவையில் உள்ள நிலையில் ஏற்கனவே பராமரிப்பு பணி பார்த்து வரும் தரணி அயோஸியேட் நிறுவனம், மதுரை அவர்களுக்கு மேலும் ஒரு மாத காலம் **01.08.2022** முதல் **31.08.2022** வரை உள்ள காலத்திற்கு பணி நீடிப்பு செய்து செலவினம் ரூ.3,30,000/–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **01.08.2022**–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 89 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் – 90</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு திடக்கழிவு மேலர்ண்மை திட்ட பணிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மீண்டும் மஞ்சல் பை மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு பிரச்சாரம் மேற்கொள்ளவும் தேவையான ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ்கள் அச்சிட்டு வழங்க இந்நகர் மன்ற தீர்மான எண். 73 நாள் 15.07.2022 தேதிய அனுமதியின் படி 18.07.2022 தேதி விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளி விகிதங்களின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | விபரம் | The Thoothukudi District Co-operative Society Ltd-Kovilpatti | Kovilpatti Small Scale Inductries Co-Operative Society Ltd-Kovilpatti | Thirunalvelli District Co-Operative Society Ltd – Thirunalvelli |
|---|---|---|---|---|
| 1. | நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சள் பை உபயோகத்தினை பயன்படுத்தும் விழிப்புணர்வு மல்டி கலர் கோடிட்ட ஸ்டிக்கர்கள் | ரூ. 1,68,000 | ரூ. 1,73,600 | ரூ. 1,79,200 |
| 2. | கொரோனா விழிப்புணர்வு குறித்த முக கவசம் கட்டாயம் மல்டி கலர் ஸ்டிக்கர்கள் | ரூ. 1,68,000 | ரூ. 1,73,600 | ரூ. 1,79,200 |
| 3. | மஞ்சள் பை விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ்கள் நான்கு பக்கம் | ரூ. 1,47,000 | ரூ. 1,57,500 | ரூ. 1,68,000 |
| | | ரூ. 4,83,000 | ரூ. 5,04,700 | ரூ. 5,26,400 |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ள மூன்று விலை புள்ளி விகிதங்களில் குறைவான விலைப்புள்ளி விகிதம் வழங்கிய தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகம் கோவில்பட்டி என்பவருக்கு விநியோக உத்தரவு வழங்கி பணி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)குறைந்த விலைப்புள்ளி விகிதம் வழங்கிய தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகம் கோவில்பட்டி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 01.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 90 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 91

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ.16,34,269/– க்கும், ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ரூ.918373/– க்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம் 3, நாள் – 24.05.2022–ல் நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. அதன்படி நகர்மன்ற தலைவர்அவர்களின் வாகனம் ஸ்கார்பியோ வாகனத்திற்கு ரூ.16,34,269/– ம் ஆணையாளர் அவர்களுக்கு புதிய பொலீரோ வாகனம் ரூ.9,18,373/–ம் மகேந்திரா மகேந்திரா நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் இரண்டு வாகனங்களுக்கும் மண்டல போக்குவரத்து அலுவலகம், காரைக்குடி அலவலகத்தில் பதிவு செய்திட உத்தேச செலவீனம் ரூ.6,00,000/– த்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை குடிநீர்நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 10.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 91 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 92

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர், பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய ஸ்கார்பியோ வாகனம் மற்றும் பொலீரோ வாகனங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று வாங்கப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வாகனங்களையும் மண்டல போக்குவரத்து அலுவலகம், காரைக்குடியில் பதிவு செய்திட இரண்டு வாகனத்திற்கும் இன்சூரன்ஸ் பாலிசி எடுப்பது அவசியமாகிறது. எனவே இரண்டு வாகனத்திற்கும் யுனைடெட் இண்டியா இன்சூரன்ஸ் பாலிசி எடுத்திட கேட்பு பெறப்பட்டதில் ஸ்கார்பியோ வாகனத்திற்கு ரூ.63,328/–ம் பொலீரோ வாகனத்திற்கு ரூ.30,023/–ம் யுடைடெட் இந்தியா இன்சூரன்ஸ் லிமிடேட் நிறுவனத்திற்கு செலுத்திட வேண்டி செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 12.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 92 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் – 93</u>**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் **2022–2023** க்கு ஏலம் /ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு தினத்தந்தி நாளிதழில் **19.07.2022** அன்று பிரசாரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் வரப்பெற்று உள்ளது. பட்டியலின்படி தொகை ரூ.**20,046/–** யினை தினத்தந்தி நாளிதழுக்கு வழங்கிடமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பட்டியல் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 93 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் – 94</u>**

தேவகோட்டை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிய கணிணிகள் மற்றும் கணினி பொருட்களை விநியோகம் செய்திட **11.07.2022** அன்று விலைப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் **18.07.2022** அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்காணும்விபரப்படி பார்வைக்கு,

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | <u>அருள் கம்ப்யூட்டர்ஸ்</u> | | | |
| | HP all in one Computer | 3 | 2,52,000.00 | |
| | Android Tv | 1 | 55,500.00 | |
| | Web Computer | 1 | 38,000.00 | 3,95,500.00 |
| | CPU | 1 | 50,000.00 | |
| 2. | <u>Sivom Copiers</u> | | | |
| | HP all in one Pc Computer | 3 | 2,55,300.00 | |
| | Android Tv | 1 | 54,300.00 | |
| | Web Computer | 1 | 39,500.00 | 3,96,950.00 |
| | CPU | 1 | 47,850.00 | |
| 3. | <u>Karai Computers</u> | | | |
| | All in one Pc Computer | 3 | 2,56,497.00 | |
| | Android Tv | 1 | 55,300.00 | |
| | Web Computer | 1 | 39,500.00 | 3,99,297.00 |
| | CPU | 1 | 48,000.00 | |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் அருள் கம்பியூட்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பட்டியல் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 94 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 95

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கி கணக்கெடுப்பு செய்தல் பணிக்கு 04.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | GOOD HOPE, Madurai (நபர் 1-க்கு) | - | 600.00 |
| 2. | READ Trust, Madurai (நபர் 1-க்கு) | - | 650.00 |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Good Hope, Maduraiநிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 05.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 95 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 96

இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களால் நகராட்சியில் பணிபுரியும் பெண்களுக்கான மேலாண்மை மற்றும் வளர்ச்சி பயிற்சியில் இணைப்பில் கண்டுள்ளவாறு இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்கண்ட பணியாளர்களை 24.08.2022 முதல் 26.08.2022 முடிய நடைபெறவுள்ள 3 நாட்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள அனுப்பி வைக்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி கடிதத்தின்படி கீழ்க்கண்டுள்ள பணியாளர்களை 3 நாட்கள் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள தங்குமிடம் மற்றும் உணவு கட்டணமாக நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.1000/–வீதம் 3 நபர்களுக்கு 3 நாட்களுக்கு ரூ.3000/– வீதம் = ரூ.9000/–த்தினை இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் என்ற முகவரிக்கு கேட்பு வரைவோலையாக அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பயிற்சியில் கலந்து கொள்ளும் பணியாளர்கள் பெயர் மற்றும் பதவி | பயிற்சி நடைபெறும் நாட்கள் | பயிற்சி நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | திருமதி கு.ராஜகுமாரி,<br>பதிவறை எழுத்தர், | 24.08.2022<br>முதல்<br>26.08.2022<br>முடிய | இயக்குநர் அவர்கள்,<br>தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், அழகேசன் ரோடு,<br>சாய்பாபா காலணி,<br>கோயம்புத்தூர்–641 011. |
| 2 | திருமதி கே. தௌலத்நிஷாபேகம்,<br>துப்புரவுப்பணிமேற்பார்வையாளர், | | |

| | | | |
|---|---|---|---|
| 3 | திருமதி க.வீரலெட்சுமி, துப்புரவுப்பணிமேற்பார்வையாளர், | | தொலைபேசி 0422 – 2441086 |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

அ)ரூ.9000/–ஐ இயக்குநர் அவர்கள், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் என்ற முகவரிக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 22.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 96 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 97</u>

தேவகோட்டை நகராட்சியில்கல்வி நிதி 2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 6–வது வார்டு உயர்நிலைப்பள்ளியில் ஸ்மார்ட் கிளாஸ் அமைத்தல் பணி. | 9.90 | 1)TREASURE ENVISION | 0.07% குறைவு |
| | | | 2) JMD SOLUTION | 2.11% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்கு புல்வெட்டும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் விநியோகம் செய்தல் பணி. | 2.00 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.10% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 2.60% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 97 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 98</u>

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு மராமத்து பணி செய்தல். | 9.00 | 1)திரு.C.ரமேஷ் முருகன் | 0.15% குறைவு |
| | | | 2) திரு.K. காசிலிங்கம் | 3.20% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 98 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 99</u>

தேவகோட்டை நகராட்சியில்குடிநீர் நிதி 2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12சுப்பிரமணியபுரம் தெருவில் புதிய ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தல் பணி. | 8.00 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.12% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 3.39% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 99 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 100</u>

தேவகோட்டை நகராட்சியில்கல்வி நிதி 2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 29.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத் தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவி ட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான நித்தியகல்யாணிபுரம் 10– | 9.00 | 1)திருமதி.S. ஏலம்மாள் | 0.18 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சத்துணவு கூடம் அமைத்தல் பணி | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 4.58% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான நித்தியகல்யாணிபுரம் 10–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கழிப்பறை கட்டிடம் அமைத்தல் பணி | 9.90 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.09% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 3.20% அதிகம் |
| 3 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான நித்தியகல்யாணிபுரம் 10–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் முன்புறம் மற்றும் தென்புறம் சுற்றுசுவர் அமைத்தல் பணி | 9.80 | 1)திரு.K. மோசஸ் | 0.19% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 4.98% அதிகம் |
| 4 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான நித்தியகல்யாணிபுரம் 10–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பின்புறம் மற்றும் வடக்குபுறம் சுற்றுசுவர் அமைத்தல் பணி | 9.90 | 1)AUGIMA ENGINEERING PVT LTD | 0.22% குறைவு |
| | | | 2) G.விக்னேஷ் கண்ணா | 4.15% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 100 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 101</u>

தேவகோட்டை நகராட்சியில்குடிநீர் மற்றும் வடிகால் நிதி2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 02.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள மழைநீர் வடிகால், கால்வாய்கள் மற்றும் சிறு பாலங்கள் அனைத்தும் துார்வாருதல் பணி. | 10.00 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.17% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 4.17% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு–</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 101 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 102

தேவகோட்டை நகராட்சியில்நமக்கு நாமே திட்டம்2021 – 2022-ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 23.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் சிசிடிவி கேமிரா 8 எண்ணங்கள் நிறுவதல் பணி | 2.70 | 1)திரு.C. ராஜா | 0.02% குறைவு |
| | | | 2) திரு.R. சுரேஷ் | 4.57% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான அழகப்பா பூங்காவில் சிசிடிவி கேமிரா 16 எண்ணங்கள் நிறுவதல் பணி | 4.50 | 1)திரு.C. ராஜா | 0.03% குறைவு |
| | | | 2) திரு.R. சுரேஷ் | 5.12% அதிகம் |
| 3 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட தி.ஊரணி, கருதாவூரணி, வள்ளியப்ப செட்டி ஊரணி ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடுதல் பணி | 1.50 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.11% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 2.78% அதிகம் |
| 4 | தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பெரியகருப்பன் 2–வது குறுக்குத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 7.00 | 1)திரு.G. விக்னேஸ் கண்ணா | 0.07% குறைவு |
| | | | 2) திரு.S. கணேசன் | 3.55% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு–**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 102 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 103

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 29.06.2022–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற 31.07.2022 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள், நகரின் பிற பகுதிகிளில் டெங்கு

கொசு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து 45 DBC பணிய ாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் ஒரு மாத காலம் 01.08.2022 முதல் 31.08.2022 வரை பணி நீட்டிப்பு செய்யவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/– த்திற்கு (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.07.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 103 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 104

தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் அலுவலக பயன்பாட்டிற்காக இணைய இணைப்பு பெறுவதற்காக ஸ்ரீ காடேரியம்மாள் டெலிகாம் நெட் ஒர்க் நிறுவனத்தின் மூலம் இணைப்பு பெறவும் அதற்கான பொருத்துவம் கட்டணம் ரூ.5000/– செலுத்தவும். மேற்காணும் இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம் ஒவ்வொரு மாதம் செலுத்த ஆகும் செலவினத் தொகை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 104 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 105

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை தனியார் நிறுவனமான தரணி அஸோஸியேட்ஸ் நிறுவனத்தார் அவர்களால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களின் பராமரிப்பு பணி காலம் 31.03.2022 அன்று முடிவடைந்ததை அடுத்து பணியின் அவசியம் கருதி 31.08.2022 முடிய பணி நீட்டிப்பு செய்த காலம் முடிவடைகின்றது. மேலும் LED விளக்குகளாக மாற்றம் செய்திட வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் பிரேரணை நிலுவையில் உள்ள நிலுவையில் ஏற்கனவே பராமரிப்பு பணி பார்த்து வரும் தரணி அஸோஸியேட்ஸ் நிறுவனம், மதுரை அவர்களுக்கு மேலும் இரண்டு மாத காலம் 01.09.2022 முதல் 31.10.2022 வரை உள்ள காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து செலவீனம் ரூ. 6,60,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 01.09.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 105 — அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் — 106

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2022 — 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 30.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான சங்கு ஊதும் இயந்திரம் மராமரத்து பணி செய்தல். | 3.00 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.04% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 2.60% அதிகம் |

**அலுவலக குறிப்பு: —**
அ)பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.08.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 106 — அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் — 107

தேவகோட்டை நகராட்சியில்15—வது மத்திய நிதிக்குழு மானியம்2021 — 2022-ம்நிதியாண்டு Un-Tited Grant-ன்கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 21.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு 12 சுப்பிரமணிபுரம் புதுத்தெரு மற்றும் சிலம்பனி வடக்கு ஆகிய பகுதிகளில் சிறு பாலங்களுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 6.73 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.07% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 3.95% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி. | | | |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 107 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 108</u>

இந்நகராட்சியில் தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2020 – 2021ன் கீழ் 5 சிப்பங்களாக சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மானிய நிதி 647 இலட்சத்தில் 10 சதவீதம் பிடித்தம் போக 582 இலட்சம் விடுவிக்கவும் 10 சதவீதம் பிடித்தம் செய்து மீதம் 253 இலட்சம் விடுவிக்கவும் அப்படி விடுவிக்கபடுவதற்கு ஈடு வைப்பு தொகையாக ரூ.54,36,428/– TNUIFSL நிறுவனமும் நகராட்சியும் சேர்த்து ஈடு வைப்புத் தொகை பத்திரம் தயார் செய்து வழங்கிட வேண்டும் என TNUIFSL நிறுவனத்தின் 16.09.2022ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து 54,35,428/– ஐ வைப்புத் தொகை பத்திரமாக மாற்றம் செய்து TNUIFSL நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பிடித்தம் செய்த 10% தொகையினை பணி முடிவறிக்கை வழங்கியதும் விடுவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ.54,35,428/– தொகையினை TNUIFSL நிறுவனத்திற்கு ஈடு வைப்புத் தொகை பத்திரமாக வழங்கிட மன்றத்தின் மேலான அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 23.09.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 108 – அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் – 109</u>

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–23ன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23 ஆற்றங்கரை ரோடு மாட்டு சந்தை இடத்தில் புதியதாக வாரச்சந்தை அமைக்க ரூ.2.00 கோடி மதிப்பீட்டிலான பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு அனுப்பி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :–**</u>

மேற்காணும் பணிகளின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 15.09.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 109 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் – 110

தேவகோட்டை நகராட்சியில்பொது நிதி 2022 – 2023-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 18.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1. | தாணிச்சாவூரணி ரோடு குறுக்குத்தெரு (நாச்சியார் நகர் 3–ம் தெரு) பேவர் ப்ளாக் சாலை அமைத்தல் பணி | 5.50 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.04% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 4.19% அதிகம் |
| 2. | எம்.எம் நகர் குறுக்குதெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 5.50 | 1)திரு.P. சந்திரன் | 0.10% குறைவு |
| | | | 2) திரு.அண்ண்ணாமலை & கோ | 4.32% அதிகம் |
| 3. | அண்ணாசாலை சர்ச் வீதி குறுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி. | 6.20 | 1)திரு.K. மோசஸ் | 0.09% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 3.65% அதிகம் |
| 4. | செப்பவயலார் தெரு குறுக்குத்தெரு பேவர் பிளாக் மற்றும் வடிகால் கட்டும் பணி | 5.10 | 1)திரு.K. காசிலிங்கம் | 0.07% குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 5.04% அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 110 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்–111

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய எட்டுகடைகளில் கடை எண்.7, 10.01.2017 அன்று நடைபெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளிக்கு திரு குமரேசன் என்பரால் முன்வைப்பு தொகையாக ரூ.2,00,000/– த்திற்கான வங்கி வரைவோலைகள் **(399592, 399599)** நகராட்சியில் வழங்கப்பட்டு உள்ளது. வரவு வைக்கப்பட்ட வங்கி வரைவோலைக்கான தொகை ரூ 2,00,000/– இதர வரவாக எடுக்கப்பட்டுள்ளது. இதர வரவில் உள்ள தொகை ரூ 2,00,000/– த்தினை முன்வைப்பு தொகை தலைப்பிற்கு மாற்ற மன்ற அனுமதி வேண்டுப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 111 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–112</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு 2022–2023 ஆண்டிற்கான மழைக்கோட் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.09.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 112 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–113</u>**

தேவகோட்டை நகராட்சியில் இந்திய திருநாட்டின் 75வது சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழாவின் ஒரு அங்கமாக அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றும் நிகழ்வை ஆகஸ்டு 13 முதல் ஆகஸ்டு 15 தேதி வரை கொண்டாட உத்தேசித்ததை தொடர்ந்து தமிழ்நாடு தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் உத்தரவின்பேரில், பொதுமக்களின் பங்களிப்புடன் அனைத்து வீடுகளிலும் தேசிய கொடியினை வெளிப்படையாக காட்சிப்படுத்தி பறக்கவிட வேண்டும் என உத்தரவிட்டதன் பேரிலும், வெளிசந்தை மூலமாக 8000 எண்ணம் தேசியக்கொடியினை பெற்றுக்கொண்டும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுஅலுவலகம் சிவகங்கை மூலம் 9000 எண்ணம் தேசிய கொடியினை பெற்றுக்கொண்டும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி விற்பனை செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட தொகை மக்களிடமிருந்து பெறப்பட்டவுடன் அதனை பொது நிதி கணக்கில் மீள வரவு வைத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கூறியுள்ள 17000 எண்ணம் தேசியக்கொடியினை வாங்குவதற்கு செலவினத்தொகை ரூ.3,30,000/– லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 02.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 113 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–114</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 27 வார்டுகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் தூய்மை பணி மேற்கொள்ள தளவாட பொருட்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சத்திற்கு) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 114 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–115</u>**

பொதுசுகாதாரப்பிரிவு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் தினந்தோறும் பண்டிகைகள் கோவில் திருவிழாக்கள் நடைபெற்று வருவதாலும், தற்போது மழைக்காலமாக இருப்பதாலும் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போது நகராட்சியில் கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு பவுடர், ஆகியவை இருப்பு மிக மிக குறைவாக உள்ளதால், பொது மக்களின் நலன் கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் நீர்த்த சுண்ணாம்பு பவுடர் – 20 மெட்ரிக் டன் பொருட்களை வாங்கி வழங்கிட தோராயமாக செலவினத்தொகை ரூ.3,00,000/– (மூன்று இலட்சம் ) –க்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி பெற்றும் விலைப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 05.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 115 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–116</u>**

பொதுசுகாதாரப்பிரிவு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளிலும் தினந்தோறும் பண்டிகைகள் கோவில் திருவிழாக்கள் நடைபெற்று வருவதாலும், தற்போது மழைக்காலமாக இருப்பதாலும் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் தற்போது நகராட்சியில் கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு பவுடர், ஆகியவை இருப்பு மிக மிக குறைவாக உள்ளதால், பொது மக்களின் நலன்

கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் நீர்த்த சுண்ணாம்பு பவுடர் – 20 மெட்ரிக் டன் பொருட்களை வாங்கிட விலைப்புள்ளி பெறப்பட்டு மிககுறைந்த விலைப்புள்ளியான MSMVM Agencies, 268, East Street, Piranmalai நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **09.08.2022–ல்** முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 116 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–117**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 27 வார்டுகளிலும் டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளவும்,

1) Pulse fog- Fogging Machine-3 எண்ணம்
2) Vechile Mounted Fogging Machine -1 எண்ணம்

மேற்கூறியுள்ள புகை தெளிப்பு இயந்திரங்கள் புதியதாக வாங்கிட உத்தேச செலவினம் ரூ.8,40,000/– (ரூபாய் எட்டு லட்சத்தி நாற்பதாயிரம்) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **29.09.2022–ல்** முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 117 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–118**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், சீருடை பணியாளர்களான அலுவலக உதவியாளர்கள், ஓட்டுனர்கள், மகப்பேறு உதவியாளர், இரவு காவலர்கள் குழாய் திறாப்பாளர்கள் ஆகிய பணியாளர்களுக்கு 2022–2023 ஆண்டிற்கான சீருடையினை அரசு நிறுவனம் ஒன்றின் மூலம் பெற்று பணியாளர்களுக்கு வழங்க உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சத்திற்கு) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் **29.09.2022–ல்** முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 118 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–119**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான வாடியார் வீதி கடை எண்.7, வரிவிதிப்பு எண்.110/53007 மற்றும் திருப்பத்தூர் ரோடு கடை எண்.10 வரிவிதிப்பு எண்.110/52010 ஆகிய இரண்டு கடைகளுக்கும், முறையே 2017–2018 முதல் 16.08.2022 வரை வாடகை நிலுவை திரு ரவீந்திரன், கடை எண்.7–க்கு தொகை ரூ.8,35,977/– மற்றும் திருமதி.இளமதி கடை எண்.10–க்கு, தொகை ரூ.9,62,868/– உள்ளது. மேற்படி இரண்டு கடைகளும் 16.08.2022 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. பூட்டி சீல் வைக்கப்பட்ட கடைகளுக்கான கேட்பினை கணினியிலிருந்து நீக்கம் செய்யவும், கடை உரிமையாளர்கள் சொத்தின் மீது வழக்கு தொடரவும், கடையினை மறு ஏலத்திற்கு கொண்டு வரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 119 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்–120**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் விபரப்படியான கடைகளுக்கு 2017 முதல் நிலுவையில் உள்ளதால், 23.08.2022 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ள கீழ்காணும் விபரப்படியான கடைகளை கணினி கேட்புயிலிருந்து 23.08.2022–க்கு பின்னர் நீக்கம் செய்யவும், கடை உரிமையாளர்களின் சொத்தின் மீது வழக்க தொடர்வும், கடையினை மறு ஏலத்திற்கு கொண்டு வரவு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பேருந்து நிலைய மேற்குபகுதி<br>கடை எண்.11, வரிவிதிப்பு எண்.110/54011<br>திரு தமிழரசன் | 2018–2019 மே முதல் 2022–2023 ஆகஸ்டு | ரூ.8,12,729/– |
| 2. | பேருந்து நிலைய மேற்குபகுதி<br>கடை எண்.12 வரிவிதிப்பு எண்.110/54012<br>திருமதி சௌந்திரவள்ளி | 2018–2019 மே முதல் 2022–2023 ஆகஸ்டு | ரூ.10,63,327/– |
| 3. | பேருந்து நிலைய மேற்குபகுதி<br>கடை எண்.13, வரிவிதிப்பு எண்.110/54013<br>திரு ஜெயக்குமார் | 2017–2018 டிசம்பர் முதல் 2022–2023 ஆகஸ்டு | ரூ.8,87,741/– |
| 4. | பேருந்து நிலைய மேற்குபகுதி<br>கடை எண்.14, வரிவிதிப்பு எண்.110/54014<br>திரு சித்திரைச்செல்வன் | 2017–2018 ஜுலை முதல் 2022–2023 நடப்பு | ரூ.9,62,733/– |
| 5. | பேருந்து நிலைய மேற்குபகுதி<br>கடை எண்.15, வரிவிதிப்பு எண்.110/54015<br>திரு ஆர்.சிவஞானம் | 2018–2019 டிசம்பர் முதல் 2022–2023 ஆகஸ்டு | ரூ.9,15,299/– |

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.09.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 120 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்–121

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குளியல் சோப்புகள் மாதம் ஒன்றுக்கு ஒன்று வீதம் 12 மாதங்களுக்கு 12 வீதம் 36 பணியாளர்களுக்கு 432 சோப்புகள் மற்றும் 36 பணியாளர்களுக்கு ஒரு ஜோடி காலனி வீதம் 36 ஜோடி காலனிகள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்க உத்தேச செலவினம் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.09.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 121 – அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்–122

தேவகோட்டை நகராட்சி தொடர்பான வழக்குகளை கீழமை நீதிமன்றங்களில் வழக்கு நடத்திட திரு கரு.பாரதிகண்ணன் வழக்கறிஞர், அவர்களை நியமனம் செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அன்னார் திரு கரு.பாரதிகண்ணன், வழக்கறிஞர் 15 ஆண்டுகள் பணி அனுபவம் உள்ளதால், இந்நகராட்சி வழக்குகளை நடத்திடவும், வழக்குகள் குறித்த ஆலோசனை பெற்றிடவும் நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) Bar counsel of Tamilnadu and pandicherry – 3443/2011மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் 122 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–123</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 2 வார்டு வரை உள்ள குடியிருப்பு கட்டிடங்கள் வணிக பயன்பாட்டு கட்டிடங்கள் மற்றும் காலிமனை இடங்களுக்கு பொது சீராய்வு செய்யப்பட்ட இனங்களுக்க சிறப்பு கேட்பு அறிவிப்பினை கறுப்பு கலரில் லேசர் பிரிண்ட் எடுத்த வகையில் பட்டியல் வரப்பெற்ற உள்ளது. பட்டியல் படி தொகை ரூ.200,619/– யினை தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கம், திருச்சி அவர்களுக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.Bill No.TBM/22-23/00854 dated – 08.08.2022 தொகை ரூ.200,619/–

**அலுவலகக்குறிப்பு–**

அ)மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 123 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–124</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நகரின் முககிய இடங்களில் 13 எண்ணம் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர்மட்ட தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த 2017ம் ஆண்டுக்கு முனனர் வரை நகரில் காலை மற்றும் மாலை என இருவேலைகள் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில், அதன் பின்னர் இரண்டு ஆண்டுகள் போதிய மழை பெய்யாத காரணத்தால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து சிறிது குடிநீர் வறட்சி ஏற்பட்டது. இதனால் தினசரி இரண்டு வேளை வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் தினசரி ஒருவேளையாக மாற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. இந்த நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நகரில் மழை ஆண்டு சராசரியை விட 50 சதவிகிதத்திற்கும் கூடுதலாக பெய்துள்ளதால் நிலத்தடி நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது. இதன் காரணமாகவும், தற்பொழுது நகராட்சியால் வழங்கப்படும் குடிநீரின் அளவு போதுமானதாக இல்லை எனவே மீண்டும் தினசரி இரண்டு வேளை குடிநீர் வழங்கிட கோரியும் பொதுமக்கள் நகர்மன்ற தலைவருக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதன் அடிப்படையில் நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்கள் நகரில் மீண்டும் இரண்டு வேலைகள் (காலை மற்றும் மாலை ) குடிநீர் வழங்கிட ஆவண செய்யுமாறு நகராட்சி பொறியாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். தற்பொழுது நகரில் உள்ள 13 உயர்மட்ட தொட்டிகள் மற்றும் அதன் வால்வுகளை இயக்க 12 எண்ணம் பணியாளர்களே உள்ளனர். தினசரி குடிநீர் விநியோகம் இருவேளை ஆக்கப்பட்டால் அப்பொழுது உயர்மட்ட தொட்டிகள் மற்றும் அதன் வால்வுகளை இயக்க கூடுதல் பணியாளர்கள் தேவைப்படும். தற்பொழுது நகராட்சி வசம் போதுமான பணியாளர்கள் இல்லாததால் மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விலைவிகித அடிப்படையில் வெளிக்கொணர்வு (Out sourching) முறையில் தனியார் ஒப்பந்த

அடிப்படையில் பணியாளர்களை ஈடுபடுத்தினால் மட்டுமே மேற்காணும் பணியினை செய்ய இயலும். எனவே 6 மாத காலத்திற்கு மேற்காணும் பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ. 9,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு—**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 124 — அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள்—125**</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நகரின் முக்கிய இடங்களில் 13 எண்ணம் உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் தினசரி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 93 LPCD வீதம் 4.67 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் குடிநீரில், பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட, சுகாதாரமான குடிநீர் வழங்கும் பொருட்டு திரவ குளோரின் (Liquid Sodium Hypo Chlorite Solution) கலந்து விநியோகம் செய்யப்படுகின்றது. குடிநீரில் தினசரி ஒரு இலட்சம் லிட்டருக்கு 2.50 லிட்டர் வீதம் திரவ குளோரின் கலந்து விநியோகிக்கப்படுகிறது. எனவே நகரில் தினசரி விநியோகம் செய்யப்படும் 4.67 MLD குடிநீருக்கு தினசரி சுமார் 120 லிட்டரும் ஓர் ஆண்டிற்கு சுமார் 43800 லிட்டரும் (120 X 365 = 43800 L) மேலும் மழை காலங்களிலும் மர்ம காய்ச்சல் சமயங்களிலும் குடிநீரில் திரவ கிளோரின் தினசரி கூடுதலாக கலந்து விநியோகம் செய்ய வேண்டியிருப்பதால் ஓர் ஆண்டிற்கு சுமார் 45000 லிட்டர் தேவைப்படுகின்றது. எனவே திரவ குளோரின் ஓர் ஆண்டிற்கு வாங்குவதற்கு உத்தேசமாக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 9,00,000/—க்கு ஆணையர் அவர்கள் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலகக்குறிப்பு—**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 125 — அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள்—126**</u>

தேவகோட்டை நகராட்சியில்சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டம்2021 — 2022-ன் கீழ் மன்றத்தால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 07.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சி 14–வது வார்டு நகர்மன்ற நடுநிலைப் பள்ளியில் Smart Class Room அமைத்தல். | 2.00 | 1)CORPORATE CONCEPTS – INFRA PVT LTD, T.Nagar, Chennai - 600017 | 0.01% குறைவு |
| | | | 2) DECCAN – Energy Solutions, T.Nagar, Chennai – 600017 | 2.85% அதிகம் |
| 2. | தேவகோட்டை நகராட்சி 9–வது வார்டு நகர்மன்ற தொடக்கப் பள்ளியில் Smart Class Room அமைத்தல். | 2.00 | 1)CORPORATE CONCEPTS – INFRA PVT LTD, T.Nagar, Chennai - 600017 | 0.01% குறைவு |
| | | | 2) DECCAN – Energy Solutions, T.Nagar, Chennai – 600017 | 2.85% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 126 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–127</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்–6, சம்பந்தர் தெருவில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த மழைநீர் வடிகால் துார்ந்து போய் உள்ளது. இதனால் மழை பெய்யும் சமயங்களில் பெருக்கெடுத்து வரும் மழைநீர் வழிந்தோட வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் குட்டை போல் காட்சியளித்து சுகாதார சீர்கேடை ஏற்படுத்துகிறது. மேலும் சிறுபாலம் அமைத்து வடிகாலையும் நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளது. பொது சுகாதார நலன் கருதி மேற்காணும் இடத்தில் புதிதாக சிறுபாலத்துடன் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.6,00,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:–</u>

குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 127 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–128</u>

இந்நகராட்சி பகுதிகளில் மொத்தம் 168.73கி.மீ சாலைகள் உள்ளது. இதில் பல்வேறு திட்டப் பணிகள் மற்றும் பொதுப் பணிகளில் சுமார் 105.00 கி.மீ தார் சாலைகள் போடப்பட்டுள்ளன.

மீதமுள்ள சாலைகள் மேடு பள்ளமாக உடைந்து மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேலும் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் சிவகங்கை மாவட்டத்தில் கனமழை மற்றும் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சாலைகள் பழுதாக அதிக வாய்ப்பு உள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் உள்ள தார்சாலைகளை புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும் செலவீனத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 128 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–129</u>

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 29.07.2022–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற 31.08.2022 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் அனைத்து 45 DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் ஒரு மாத காலம் 01.09.2022 முதல் 30.09.2022 வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/– த்திற்கு (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 25.08.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 129 – அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள்–130</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணை ந.க.எண்.பி2/27293/2021 நாள்13.10.2021 –ன்படியும் இந்நகர்மன்ற தீர்மான எண்.21 நாள் 25.01.2022ன்படியும் இயங்கி வரும் JCB இயந்திரம் தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைக்காலம் மற்றும் குப்பை கிடங்கு பணிகள் மற்றும் பொதுசுகாதாரப்பணிகளை கருத்தில் கொண்டு மேலும் ஒரு வருட காலத்திற்கு JCB வாகனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,50,000 X 12 =18,00,000-இலட்சத்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 130 – அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள்–131</u>**

தேவகோட்டை நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும், கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் அடிப்புறத்தினையும் 100 சதவிகிதம் தூர்வாரி தூய்மைப்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.10383/2021/மா.தி2, நாள்–27.06.2022ன்படி, அறிவுறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து தேவகோட்டை நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கா வண்ணம், முறையாக தூர்வாரி மழைக்கால தொற்றுக்கள் ஏற்படாவண்ணம் இருப்பதற்கு ஏதுவாக நகர்பகுதியில் உள்ள தூர்வாராத மழைநீர் வடிகால்களையும், குளக்கால்களையும் மற்றும் சிறு பாலங்களையும்,JCB, HITACHIமற்றும் டிராக்டர் போன்ற வாகனங்களை கொண்டு சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 6.00/– இலட்சத்திற்கு ஆணையர் அவர்கள் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 131 – அனுமதிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) கா.சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**